Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 206

செவ்வாய்க்கிழமை 20 ஜுன் 2023

ஆனி 05 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# ஐ.நா. பரிந்துரைகளை உடன் அமுலாக்குக!

## ஜெனிவா அமர்வில் இலங்கைக்கு நேற்று வலியுறுத்து

**கொழும்பு, ஜுன் 20**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் முற்றாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தலைவர் வோல்க்கர் டேர்க் நேற்று வலியுறுத்தினார்.** »11



# எரிபொருள் விலை குறையும்?

கொழும்பு, ஜுன் 20

உலக அளவில் கச்சா எண்ணெயின் விலை குறைவதற்கு வாய்ப்புள்ளது என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சர்வதேச அளவில் பல்வேறு நிறுவனங்களினதும் கச்சா எண்ணெயின் »11

# இலங்கையில் இடம்பெற்றது திட்டமிட்ட இனப்படுகொலை

## ஜெனிவா அமர்வின் ஆரம்பநாளில் ஒளிப்பட ஆதாரத்துடன் பரப்புரை

கொழும்பு, ஜுன் 20

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமான நிலையில், இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலையே என்று ஒளிப்படங்களை காட்சிப்படுத்தி பரப்புரை முன்னெடுக்கப்பட்டது.

அனைத்துலக மனித உரிமைகள் சங்கத்தின் ஏற்பாட்டில் »11

# கம்மன்பிலவின் வருகைக்கு எதிராக நாளை போராட்டம்

கொழும்பு, ஜுன் 20

தமிழர்களின் பூர்வீக நிலமான குருந்தூர்மலைக்கு உதயகம்மன்பில நாளை வருகைதரவுள்ள நிலையில், அவருடைய வருகைக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதற்கு பொதுமக்கள் முடிவெடுத்துள்ளனர்.

இது தொடர்பில் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில ஒரு அடிப்படை இனவாதி. அவர் குருந்தூர் »11

# பாண் விலையை 10 ரூபாவால் குறைக்குக

கொழும்பு, ஜுன் 20

பாண் மற்றும் சிற்றுண்டிகளின் விலைகளை 10 ரூபா »11

# அதிபர்கள் இல்லாமல் எட்டுப் பாடசாலைகள்!

## ஊர்காவற்றுறையில் இந்த நிலை

யாழ்ப்பாணம், ஜுன் 20

ஊர்காவற்றுறையில் எட்டுப் பாடசாலைகள் அதிபர்கள் இல்லாமல் இயங்குகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அனலைதீவு அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாசாலை, அனலைதீவு சதாசிவ மகா வித்தி »11

# நாணய நிதிய நிபந்தனைகளால் கண்ணெதிரே பெரும் அழிவுகள்!



## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு கலந்தாலோசிக்க அரசுக்கு அழைப்பு

கொழும்பு, ஜுன் 20

சர்வதேச நாணய நிதியத்தில் சொந்த விருப்புக்கள் மற்றும் எண்ணங்களின் பிரகாரம் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளும் மனோநிலையால், நாட்டுக்குப் பெரும் அழிவுகள் கண்ணெதிரே தெரிகின்றன - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரசாங்கம் தனது அனைத்து உடன்படிக்கைகளை »11

# பிரசவித்து ஆறு நாளேயான பெண் மீது கொடூரத் தாக்குதல்!

## கணவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜுன் 20

குழந்தையைப் பிரசவித்து ஆறு நாள்களேயான குடும்பப்பெண்ணை, அடித்துச் சித்திரவதை செய்த குற்றச்சாட்டில் அவருடைய கணவரான 26 வயதான இளம் குடும்பத்தலைவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:- »11

# இலங்கைக்கு விரைவில் 700 மில்லியன் டொலர்!

கொழும்பு, ஜுன் 20

உலக வங்கியால் இலங்கைக்கு விரைவில் 700 மில்லியன் டொலர் வழங்கப்படவுள்ளது என்று சர்வதேச ஊடகமான ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

பெரும்பாலும் அடுத்த வாரத்தில் இந்த நிதி இலங்கைக்கு வழங்கப்படக்கூடியதாக »11

# 7 பச்சிளம் நாய்க்குட்டிகளை தீயிட்டுக்கொன்ற இழிசெயல்!

## சாவகச்சேரி பொலிஸ் பிரிவில் கொடூரம்

யாழ்ப்பாணம், ஜுன் 20

ஒரு மாதம் நிரம்பாத ஏழு நாய்க்குட்டிகளை நபர் ஒருவர் தீயில் போட்டுக் கொன்றுள்ள இழிசெயல் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில், தவசிகுளம் பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. »11

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
ரூ.120,000/=
• அதிகபட்ச இரகசியதன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
011 200 88 88
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
Fitch Rating: "A-" (lka)
செலான் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துப்பாக்கியை வைத்து மிரட்டினால் சொக்லேட் போன்று உண்ணுங்கள்!

## வாழ்வாதாரப் பிரச்சினையைக் கூறியோரிடம் 'பம்பலடித்த' கடற்றொழில் அமைச்சர்

**கிளிநொச்சி, ஜூன் 20**

**துப்பாக்கியை வாயில் வைத்து இராணுவம் அச்சுறுத்தியபோது, சினிமாவில் காட்டப்படுவதைப் போன்று அதை சப்பி உண்டிருக்கலாம் என்று "பகிடி" விட்டுள்ளார் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.**

இரணைமடுக்குளத்தில் சட்டவிரோத மீன்பிடியின்மூலம் தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்றும், சட்டவிரோத மீன்பிடிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் மீனவர்களை இராணுவம் மேல்வெடி வைத்தும், வாயில் துப்பாக்கியை வைத்தும் அச்சுறுத்துகின்றது என்றும் கவலையுடன் மீனவர்கள் சுட்டிக்காட்டிய போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு நகைச்சுவையாகப் பேசியுள்ளார்.


கிளிநொச்சி, இரணைமடுக்குளத்தில் இழுவை மீன்பிடி முறையைக் கட்டுப் படுத்தி சட்ட ரீதியான மீன்பிடி முறைமைக்கு மட்டும் அனுமதி வழங்குவது தொடர்பில் ஆராயும் கூட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் இராணுவமும் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுகின்றது என்றும், அதற்கு மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும்போது மேல் வெடி வைத்தும், வாயில் துப்பாக்கியை வைத்தும் அச்சுறுத்துகின்றது என்றும் மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயத்தை தற்போதுதான் அறிகின்றேன் என்று குறிப்பிட்ட அமைச்சர், இந்த விடயம் தொடர்பில் படையினருக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும் என்றும், அடுத்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் பேசப்படவேண்டும் என்றும் மாவட்டச் செயலருக்கு அமைச்சர் பணித்தார்.

இந்த விடயம் தொடர்பில் நீண்ட நேரம் ஆராயப்பட்டது, தடை செய்யப்பட்ட தொழில் முறையை நடைமுறைப்படுத்தக்கூடாது என்றும், இது தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களத்துடன் ஆலோசிக்க வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இராணுவத்தினர் துப்பாக்கியை வாயில் வைத்து அச்சுறுத்தியபோது, சினிமாவில் நடப்பது போன்று துப்பாக்கியை சொக்லேட் உண்பது போன்று கடித்து உண்டிருக்கலாம் என்றும் அமைச்சர் அங்கு கருத்துத் தெரிவித்தார். (எ-இ)



## ஒருமித்த குரலில் பேசுவதற்கு நடவடிக்கைகளை எடுப்போம்

### ஜனநாயக த.தே.கூ. தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 20

அரசாங்கத்துடன் பேச்சு நடத்தும்போது ஒரே குரலில் பேசவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப் படுகின்றது. இரா.சம்பந்தன், சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோருடன் கலந்துரையாடி அனைவரையும் இணைக்கும் முயற்சிகளை எடுப்போம். இவ்வாறு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒரே குரலில் பேசுவதே இப்போதுள்ள முக்கியமான தேவையாகவுள்ளது. தனித்தனியே பேசும்போது ஒருமித்த கோரிக்கை பலவீனப்படும். கடந்த காலங்களில் நாம் முன்வைத்த கோரிக்கைகள் அனைத்தையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி நிராகரித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்யாது, யாப்பை உருவாக்காது இருந்தது.

இன்று நாம் அனைத்துப் பொறிமுறைகளையும் நிறைவேற்றியுள்ளோம். யாப்புக் கொள்கைகளை ஏற்று நடக்கும் கட்சிகள் அனைத்தும் எம்மோடு இணையமுடியும். அவர்கள் சமத்துவமாக நடத்தப்படுவார்கள் - என்றார். (எ-110)

## அடுத்த ஆண்டு ஜனவரி மின் கட்டண நிவாரணம்

### மின்சக்தி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 20


அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் விசேட மின்கட்டண நிவாரணத்தை மக்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜூலை மாதம் மின்கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு மின்கட்டணங்கள் குறைக்கப்படும் என்று முன்னர் அரச தரப்புத் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், மின்சக்தி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிரமங்களை நான் ஏற்றுக்கொள்கிறேன். மின்சாரக் கட்டணம் அதிகம். எரிபொருளின் விலை அதிகம். ஜனவரி முதலாம் திகதி மின்சாரத் திருத்தத்துக்கான முன்மொழிவை நவம்பரில் தாருங்கள் என்று நான் சொல்கிறேன். இப்போது ஜூலையில் மேற்கொள்ளும் திருத்தத்தின் ஊடாக சில அளவில் குறையும். 0 - 30, 30 - 60, 60 - 90 வரையான குறைந்த பட்ச மின்சார அலகுகளைப் பயன்படுத்தும் குழுவுக்கு 27 வீத மின் கட்டணத்தைக் குறைக்க முன்மொழிந்துள்ளோம்.

ஜனவரியில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து மின் கட்டணத்துக்கு உறுதியான நிவாரணம் வழங்க நாங்கள் பணியாற்றி வருகிறோம் - என்றார். (எ-இ)




## மீண்டும் வலுப்பெறும் ரூபா

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பு மீண்டும் வலுப்பெற்றுள்ளதாக இலங்கை மத்தியவங்கி அறிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை டொலரின் விற்பனை விலை 319 ரூபாவாகக் காணப்பட்ட நிலையில் நேற்று 315 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. இதே வேளை கடந்த வெள்ளிக்கிழமை 300 ரூபாவாகப் பதிவாகியிருந்த டொலரின் கொள்விலை 297 ரூபாவாகக் குறைந்துள்ளது. (ஒ-இ)

## தாக்குதல்

இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவுக்குச் சொந்தமான வீடொன்று இனந் தெரியாதவர்களால் தாக்கப்பட்டுள்ளது என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பமுனுவிலவில் உள்ள அமைச்சரின் வீட்டின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலில் வீட்டின் 8 ஜன்னல்கள் சேதமடைந்துள்ளன. (எ-இ)



## வீரவன்ஸவுக்குப் பிடியாணை!

கொழும்பு, ஜூன் 20

நீதிமன்ற வழக்கில் முன்னிலையாகாததால் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை பிடியாணை பிறப்பித்துள்ளது.

2016 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் இளவரசர் செயித் அல் ஹுசைன் இலங்கைக்கு வந்தபோது, கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்துக்கு முன்பாக வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் மூலம் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ நீதிமன்றில் முன்னிலையாகவில்லை. அவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பிடியாணை பிறப்பித்த நீதிமன்றம், வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (எ-இ)

## வலிகாமம் வடக்கில்

# விடுவிக்கப்பட்ட காணிகளை அளவிடும் பணிகள் ஆரம்பம்

வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்பட்ட மக்களின் காணிகளை சட்டரீதியாகக் கையளிப்பதற்கான அளவீட்டுப் பணிகள் நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமானது.

2013ஆம் ஆண்டு காலப் பகுதியில் இராணுவத்தினரின் பயன்பாட்டுக்காக அரசுடைமையாக்கும் நோக்கில் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் அடிப்படையில் சுவீகரிக்கப்பட்ட 6 ஆயிரத்து 300 ஏக்கர் காணிகளில் கணிசமானவை விடுவிக்கப்பட்டுள்ளன.

ஆயினும் இந்தக் காணிகள் சட்டரீதியாகத் தற்போதும் அரச காணிகளாகவே காணப்படுகின்றமையால், 2013ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானியை மீளப்பெறும் வகையில் புதிய வர்த்தமானி வெளியிடப்படவுள்ளது. அதற்காகவே காணி அளவீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அளவீட்டுப் பணிகள் இரு மாதங்களில் நிறைவடையும் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அமைச்சரவையில் டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்த காலத்திலேயே இந்தக் காணிகள் சுவீகரிக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது என்பதுடன், நல்லாட்சிக் காலத்திலேயே இந்தக் காணிகள் விடுவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (எ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் நடைபெற்ற தியாகிகள் தின நிகழ்வுகள்



வவுனியா, ஜூன் 20

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியால் தியாகிகள் தினம் நேற்றுத் திங்கட்கிழமை வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டது. மணிக்கூட்டுக்கோபுரச் சந்தியில் அமைந்துள்ள பத்மநாபாவின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. தேக்காவத்தையில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் நினைவேந்தல் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், கட்சியின் முக்கியஸ்தர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-110)

## வீட்டில் தனித்திருந்த

# பெண்ணைத் தாக்கி நகை கொள்ளை



### வடலியடைப்பில் நேற்று அதிகாலை சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

**வீட்டில் தனித்திருந்த பெண்ணை முகமூடி அணிந்த 4 பேர் கொண்ட கொள்ளைக் கும்பல் அடித்துத் துன்புறுத்தி காயப்படுத்திவிட்டு நகைகளைக் கொள்ளையடித்துச்சென்றுள்ளது.**

இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வடலியடைப்பு சித்தன் கேணி - பண்டத்தரிப்பு பிரதான வீதியில் இந்தச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 2 மணியளவில் நடைபெற்றுள்ளது..

65 வயதான வயோதிபப் பெண் தனித்து வசித்து வருகின்றார். அவரது கணவன் வெளிநாடு சென்றுள்ளார். மகள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வருகின்றார்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் நால்வரடங்கிய குழு கதவை உடைத்து உட்புகுந்து பெண்ணைத் தாக்கி 10 பவுண் நகையைக் கொள்ளையடித்துள்ளது. காதிலிருந்த தோட்டையும் கொள்ளையிடுவதற்காக கத்தியால் காதை வெட்ட முயன்றுள்ளனர். பெண் அச்சத்தில் தோட்டையும் கழற்றிக் கொடுத்துள்ளார். பெண் வேறு யாரையும் தொடர்புகொள்ளக் கூடாது என்பதற்காக அவரது அலைபேசியையும் அடித்து உடைத்து விட்டுச் சென்றுள்ளனர்.

நேற்றுக்காலையே அயலவர்களின் உதவியுடன் அவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-125)

# புதையல்தோண்டியவர்கள் முல்லைத்தீவில் கைது!

முல்லைத்தீவு, ஜூன் 20

புதுமாத்தளனில் புதையல் தோண்டிய சந்தேகத்தில் மூவரை முல்லைத்தீவு பொலிஸார் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை கைது செய்துள்ளனர்.

புதையல் தோண்டுவதற்காக பூசைக்குரிய பொருள்களுடன் மண்வெட்டி, சவள் என்பனவற்றைப் பயன்படுத்தி புதையல் இருப்பதாக சந்தேகிக்கப்படும் இடத்தில் பூசை நடத்தி புதையல் தோண்ட முற்பட்டவேளை முல்லைத்தீவு பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. அதையடுத்து அங்கு சென்ற முல்லைத்தீவு பொலிஸார் புதையல் தோண்ட முற்பட்டவர்களை கைதுசெய்துள்ளதுடன் தோண்டுவதற்குப் பயன்படுத்திய பொருள்களையும் மீட்டுள்ளனர். (ஒ-19)



நெடுந்தீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கச்சதீவு கடற்பரப்பில் தமிழகத்தைச் சேர்ந்த இழுவை மடிப்படகு நேற்று தத்தளித்துக்கொண்டிருந்த நிலையில் கடற்படையினர் அதனை நெடுந்தீவு இறங்குதுறைக்குக் கொண்டு வந்துள்ளனர். (ஒ-125)

# ரூ. 5 கோடி செலவிடவில்லை



### அலி சப்ரி மறுப்பு

கொழும்பு, ஜூன் 20

வெளிநாட்டுப் பயணங்கள் மூலம் 5 கோடி ரூபா செலவிட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மறுத்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் வெளிநாடுகளுக்கு உத்தியோகபூர்வ பயணங்களுக்காக மில்லியன் கணக்கான ரூபாவை செலவிட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஒரு செய்தியாளர் சமர்ப்பித்த விண்ணப்பத்தின் மூலம் இந்தத் தகவல் தெரிய வந்ததாக ருவிற்றர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் இந்தப் பணத்தை 7 வெளிநாட்டு பயணங்களுக்கு செலவிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எனினும் இந்தத் தகவல் தவறானது என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். இது ஐக்கிய நாடுகள் சபை உட்பட்ட ஐந்து உத்தியோகபூர்வ தேசிய தூதுக்குழுப் பயணங்களுக்கும், அமெரிக்காவுக்கும், சவுதி அரேபியாவுக்குமான இரு தரப்பு பயணங்களின் மொத்தச் செலவாகும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பயணங்களின்போது தாம் தூதுக்குழுக்களுக்குத் தலைமை ஏற்றுச் சென்றதாகத் தெரிவித்துள்ள அலி சப்ரி, தம்மைத் தவிர மேலும் 22 அதிகாரிகள் இந்தப் பயணங்களில் இணைந்திருந்ததாக அமைச்சர் ருவிற்றர் செய்துள்ளார். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'சும்மா போற சுப்பனுக்கு சுமை தூக்க முந்நூறு பேராம்' எண்டு சொல்லுற மாதிரி, உப்புச் சப்பில்லாத ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களுக்கெல்லாம் படைபட்டாளம் இல்லாமல் போகமாட்டாராம் அமைச்சர். அதுவும் கிளிநொச்சி எண்டா இந்தப் பட்டாளத்தின்ர தொகை கூடுமாம். ஏனெண்டால், அங்கதான் அவருக்கு ஆப்புவைச்சவர் தனிக்கட்சி தொடங்கி, வீணையின்ர வாக்குகளைத் தன்ர பக்கம் மடைமாத்தி வைச்சிருக்கிறார். அதால இப்ப கிளிநொச்சிப் பக்கம் வீணைக்கச்சேரி வைக்கமுடியாத நிலை. அந்தக் கோபத்தையும், தன்ர பவரையும் கச்சேரி மீட்டிங்குகளில அமைச்சர் காட்டத் தொடங்கியிருக்கிறாராம். பூமியில இருந்து உடைஞ்சுபோன துண்டு 'சந்திரனா' மாறின மாதிரி, தன்னட்ட இருந்து பிரிஞ்சுபோய் தனக்கே 'சமத்துவமா' மாறியிருக்கிற 'சந்திரனாருக்கு' நெருக்கமான அமைப்புகளுக்கு குடைச்சல் குடுக்கிறதுக்காகவே, ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களுக்கு சிலரை 'செற்' பண்ணி அமைச்சர் கூட்டிக் கொண்டு வாறாராம். அப்பிடி வாறவை கட்சிக்காரர்தான், ஆனால் அதைமறைச்சு தாங்கள் சாதாரண பொதுமக்கள் எண்ட வேசத்தோடதான் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்துக்கு வருகினம்.

இந்தமுறை கிளிநொச்சியில நடந்த கூட்டத்துக்கும், கட்சிக்காரர், பொதுமக்கள் எண்டு ஒரு பட்டாளத்தோடதான் அமைச்சர் வந்தவர். அப்பிடி வந்த பட்டாளங்கள், காய்ஞ்ச மாடு கம்பில விழுந்த மாதிரி முன்னுக்கு இருந்த கதிரையளில பாய்ஞ்சு இடம் பிடிச்சு இருந்திச்சினம். அந்தக் கதிரையள் மேலதிக அரசாங்க அதிபர், எம்.பி.மாரின்ர பிரதிநிதியள், திணைக்கள அதிகாரியள் இப்பிடியான ஆக்களுக்கெண்டு ஏற்கனவே 'ரிசேர்வ்' பண்ணி வைச்சிருந்தது. அதால கன அதிகாரிமார் பின்னுக்குப் போய் நிண்டவை. இப்பிடி 'ரிசேர்வ்' பண்ணின கதிரைக்குரிய ஆக்கள் பின்னுக்குப் போக, அமைச்சரின்ர எடுபிடிப்பட்டாளம் அந்தக் கதிரையளில காலாட்டிக் கொண்டிருக்கிறதைப் பார்த்த சில கச்சேரி அதிகாரிமார் அவையிட்டைப் போய், இது ரிசேர்வ் பண்ணி வைச்சிருக்கு. நீங்கள் பின்னால இருக்க ஏலுமோ? எண்டு தன்மையாக் கேட்டிருக்கினம். அதுக்கு நாங்கள் எங்க இருக்கோணுமெண்டு அமைச்சர் தான் சொல்லவேணும், அவர் சொன்னால் இதை விட்டு நாங்கள் எழும்பிறம் எண்டு அந்த எடுபிடிகள் எழுப்பமாச் சொல்லியிருக்கினம். அதுக்குப் பிறகும் அவையோட கதைக்கிறது எருமை மாட்டில பெய்யிற மழைமாதிரியெண்டதால, அதிகாரிமார் அங்கால போட்டினம். அப்பிடி அந்தக் கதிரையில இருந்தவர்தான், அண்டைக்குப் பின்னேரமே அமைச்சரின்ர கிளிநொச்சி இணைப்பாளர் பதவிக்குத் தெரிவானவர்.

இப்பிடி பொதுமக்கள் எண்டு வேசம் போட்டுக் கொண்டு போன ஒருத்தர் கனடாவில இருந்து வந்தவராம். அவர் தனக்கு தங்கட கமக்கார அமைப்பு, பயிர் செய்யத் தண்ணி தரேலை எண்டு தனிப்பட்ட பிரச்சினையை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில புலம்பினார். இதெல்லாம் அதுக்குரிய திணைக்களமே தீர்க்கிற பிரச்சினை. அதைவிட இந்தக் கனடாக் கமக்காரர் தன்ர விவசாயப் பிரச்சினை சம்பந்தமான ஆவணங்களை ஒரு 'பைல்' போட்டுக் கொண்டந்தவர். ஆனால் அந்தப் 'பைல்' கடற்றொழில் அமைச்சின்ர பேரும், சீலும் அடிச்ச பைல். அதைவிட மீட்டிங் முடிஞ்சு போகேக்க, அமைச்சரின்ர எடுபிடிகள் எல்லாரும் கனடாக்கமக்காரர் எண்ட அந்தப் 'பொது மகனிட்ட' போய், 'அண்ணை பின்னேரம் வீட்ட வாறம்' எண்டு சொல்லிட்டுத் தான் போனவை. என்னதான் வேசம் போட்டாலும் மண்டை மேல இருக்கிற கொண்டையை மறைக்கத் தெரியேலையே.



- பட்சி




# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாகமுடியும். உற்சாகம் பெருக்கெடுக்கும். உங்கள் முயற்சிக்கு நண்பர்கள் ஆதரவு தருவார்கள்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். செரிமானப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**கடகம்:** முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் சில சங்கடங்கள் ஏற்படும்.

**சிம்மம்:** தொடங்கிய காரியம் அனுகூலமாகும். புதிய முயற்சிகளைத் தொடங்க உகந்தநாள். பிள்ளைகள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். புதிய நண்பர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**கன்னி:** வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்பப் பெரியவர்களுடன் கலந்து பேசி முக்கியமான முடிவு எடுப்பீர்கள்.

**துலாம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். மறைமுக எதிர்ப்பு நீங்கும்.

**விருச்சிகம்:** பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபட வேண்டி இருக்கும்.

**தனுசு:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். முடிவுகளைத் தவிர்க்கவும். சிலருக்கு திடீர்ப் பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு. மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாக இருக்கும்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் ஆதாயம் ஏற்படக்கூடும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**கும்பம்:** முக்கியமான முடிவுகள் எடுப்பதில் பதற்றம் தவிர்க்கவும். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் விட்டுக் கொடுத்துச் செல்லவும். வியாபாரத்தில் பணியாளர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக் கூடும்.

## அரங்க விழா

யாழ்ப்பாணம், ஜூன் 20

தேசிய கலை இலக்கியப் பேரவை முன்னெடுக்கும் 'நூறு மலர்கள் மலரட்டும்' எனும் தொனிப் பொருளிலான புத்தக அரங்க விழா எதிர்வரும் வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ்.சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வெள்ளி, சனி ஆகிய தினங்களில் மாலை ஈழத்து நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நாடகங்களும் இடம்பெறவுள்ளன.

(ஒ-ரி2, 66)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 20

திருநெல்வேலி ஸ்ரீ தலங்காவற் பிள்ளையார் கோயில் பெருந்திருவிழா இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இருவேளை உற்சவங்களாக பெருந்திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் ஜூலை 6ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், அன்றையதினம் மாலை கொடியிறக்க உற்சவமும் இடம்பெறுமென மேற்படி ஆலயப் பிரதமகுரு தெரிவித்துள்ளார்.

(ஒ-ரி2, 66)

# நயினாதீவு அம்மன்: ஏறியது கொடி





யாழ்ப்பாணம், ஜூன் 20

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய பெருந்திருவிழா நேற்றுத் திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

கொடியேற்ற உற்சவத்தில் வடக்கின் பல பகுதிகளையும் சேர்ந்த அடியவர்கள், புலம்பெயர் தேசத்து அடியவர்களென ஆயிரக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

தொடர்ச்சியாகப் பதினைந்து தினங்கள் ஆலயப் பெருந்திருவிழா நடைபெறவுள்ளதுடன் அடுத்தமாதம் 1 ஆம் திகதி சனிக்கிழமை இரவு சப்பறத் திருவிழாவும், 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தேர்த்திருவிழா வும், 3 ஆம் திகதி திங்கட்கிழமை கங்காதரணியில் தீர்த்தோற்சவமும், அன்றையதினம் இரவு கொடியிறக்க உற்சவமும், மறுநாள் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு தெப்போற்சவமும் இடம்பெறுமென மேற்படி ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்துள்ளனர்.

(ஒ-66,125)

# காணாமற்போனவர் சடலமாக மீட்பு!

## அடித்துக் கொல்லப்பட்டாரா? பொலிஸார் சந்தேகம்!

கிளிநொச்சியில் காணாமற்போன நபர், முல்லைத்தீவு - மல்லாவியில் கடந்த சனிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் அடித்துக் கொல்லப்பட்டிருக்கலாம் என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இளையதம்பி ராஜ்மோகன் (வயது-49) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர், கடந்த 14ஆம் திகதி தொடக்கம் தேடப்பட்ட நிலையிலேயே அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். உடற்கூற்றுப் பரிசோதனையின்போது அவருடைய தலையில் பலத்த அடிகாயங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது.

(அ-ம-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பாவப்பணத்தைப் பெறுதலும் பாவமே!

**போ**தைப்பொருள் தடுப்புத் தொடர்பான யாழ். மாவட்டச் செயலகக் கலந்துரையாடலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்த கருத்து பல்வேறு கேள்விகளை எழுப்பியிருக்கின்றது. சாதாரண ஒருவர் தெரிவித்த கருத்தாக அதைக் கடந்துவிடமுடியாது. போதைப்பொருள் விற்பனை தமிழர் தாயகத்தில் ஒரு காலத்தில் ஊக்குவிக்கப்பட்டமைக்கு அவரும் ஒரு காரணர் என்பதை அவரே தனது பேச்சில் ஒப்புக்கொண்டிருக்கின்றார். பொறுப்புள்ள அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவர் இவ்வாறு மிக மோசமான சமூக விரோதச் செயற்பாட்டுக்கு உறுதுணையாக இருந்தமையைக் கண்டிக்காமல் கடந்து செல்வதானது அதனை ஆதரிப்பது போன்றாகிவிடும்.

'இயக்கங்கள் அனைத்தும் போதைப்பொருள் வியாபாரத்தை மேற்கொண்டிருந்தன. சில இயக்கங்கள் கப்பல் கப்பலாக போதைப்பொருள் வியாபாரத்தை மேற்கொண்டன. சில இயக்க உறுப்பினர்கள் தனியாகவும் போதைப்பொருள் வியாபாரத்தை மேற்கொண்டனர். இதை என்னுடைய அனுபவத்தில், மன்னிக்கவும் அனுபவத்தில் அல்ல நேரடியாகப் பார்த்ததை வைத்துச் சொல்கின்றேன். போதைப்பொருள்களை நானும் நேரடியாகப் பார்த்திருக்கின்றேன். நான் இருந்த இயக்கம் போதைப்பொருள் கடத்தவில்லை. ஆனால் போதைப்பொருள் கடத்தியவர்களிடமிருந்து நான் பணம் வாங்கியிருக்கின்றேன். சரி பிழை என்பதற்கு அப்பால் இயக்கங்கள் எல்லாம் போதைப்பொருள் வியாபாரம் செய்தன என்பது உண்மை' என்று அமைச்சர் டக்ளஸ் கூறியிருந்தார். அவர் தலைமை தாங்கிய ஆயுதக்குழு போதைப்பொருள் விற்பனை செய்ததா? இல்லையா? என்பதை தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை என்பதைப்போல டக்ளஸ் தேவானந்தா தலைமை தாங்கிய ஆயுதக்குழு எப்படிப்பட்டது என்பது தமிழ் மக்களுக்கு மிக நன்றாகவே தெரியும்.

எனவே, அதைவிடுத்து, அமைச்சரின் கூற்றில் வெளிப்பட்ட உண்மைகளை ஆராய்வதே இப்போது அவசியமானது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, போதைப்பொருள் விற்பனையை இங்கு கட்டுப்படுத்தவில்லை என்பதும் பணத்தை வாங்கிக் கொண்டு அதைச் செய்வதற்கு அனுமதித்திருக்கின்றார் என்பதையும் தனது உரையில் அவர் தெளிவாகவே ஒப்புக்கொண்டுள்ளார். போதைப்பொருள் இனத்தை அழிப்பதற்கான கருவி. அத்தகைய போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுபவர்களைத் தெரிந்திருந்தும், அவர்களைச் சட்டரீதியாகத் தண்டிக்காமல், அவர்களிடம் பணத்தைப்பெற்று, போதைப்பொருள் விற்பனையை இன்னும் ஊக்குவித்திருக்கிறார் 'ஜனநாயக நீரோட்டத்தில் கலந்த' அமைச்சர்.


போதைப்பொருள் விற்ற பணத்தை வாங்குவதும் போதைப்பொருளை விற்பதும் ஒன்றுதான் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் குறிப்பிட்டிருந்தார். அது உண்மையே. டக்ளஸ் தேவானந்தா தான் போதைப்பொருள் விற்கவில்லை என்றாலும் அதை விற்றவர்களை தடுக்காமல் அனுமதித்ததன் ஊடாக அவரும் இந்த விடயத்தில் குற்றவாளியே. அமைச்சர் டக்ளஸ், 'மீன் மணக்கும், மீன் விற்ற பணம் மணக்காது' என்று குறிப்பிட்டிருந்தார். அவர் சொல்வதைப்போல மீனும் போதைப்பொருளும் ஒன்றல்ல. போதைப்பொருள் விற்ற பணம் பாவத்தின் சம்பளம். அந்தப் பாவப்பணத்தை வாங்கியதன் மூலம், பாவத்தின் பங்காளியாக டக்ளஸும் இணைந்துவிட்டார்.

இதேபோல அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் அவரது அமைப்புக்கும் எதிராகவும் நீண்ட காலமாக கப்பம் பெற்றனர் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வருகின்றது. அவரது ஆயுதம் தாங்கிய இயக்க காலத்திலிருந்து அரசியலுக்குத் திரும்பிய பின்னரான காலத்திலும் இந்தக் குற்றச்சாட்டு அவர்கள் மீது சுமத்தப்பட்டு வருகின்றது. அவர் அதைப் பல தடவைகள் மறுத்திருக்கின்றார். தமது கட்சியின் பெயரால் வேறு நபர்கள் கப்பம் வாங்கியிருக்கலாம் என்றும் கூறியிருக்கின்றார். ஆனால் அவரே இப்போது கப்பம் வாங்கியதைப் போன்ற செயலை – 'போதைவியாபாரிகளிடம் பணம் வாங்கினேன்' என்பதை – ஏற்றுக்கொண்டு ஒப்புதலளித்திருக்கின்றார். போதைப்பொருள் விற்றவர்கள் அமைச்சர் டக்ளஸுக்கு அன்பளிப்பாகவோ – நன்கொடையாகவோ அதைக் கொடுக்கவில்லை. போதைப்பொருள் விற்றவர்களிடம் அமைச்சர் டக்ளஸ் பணத்தைக் கடனுக்கு வாங்கவில்லையே இந்தக் கொடுக்கல் – வாங்கல் அப்பட்டமாக கப்பமே. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அந்த உரையாடலை, ஐங்கரநேசன் தவிர்ந்த ஏனைய தமிழ்த் தேசிய அரசியல் தரப்புக்கள் கண்டிக்கவில்லை. அதைவிட மிக மோசமான தண்டனைக்குரிய குற்றத்தைப் புரிந்த அவருக்கு எதிராக சட்டநடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பதும் கவலைக்குரியது.

## நாளொரு நல்வார்த்தை

"போதும் என்று நொந்துபோய், புதுவாழ்வைத் தேடுகிறீர்களா... ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்குங்கள்"

– இங்கர்சால்



# தவறாகப் பயன்படுத்தப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டம்!

## அமெ. காங்கிரஸ் உறுப்பினர் கண்டனம்

கொழும்பு, ஜூன் 20


**இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் தவறான முறையில் பயன்படுத்தப்படுகின்றது. மனித உரிமைகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு அமைய மாற்றப்படவேண்டும் - இவ்வாறு அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் மைக் லெவின் வலியுறுத்தியுள்ளார்.**



இலங்கையில் தொடரும் பயங்கரவாத தடைச் சட்டத் துஷ்பிரயோகம்மற்றும் அதன் கீழான மனித உரிமை மீறல்கள் தொடர்பான உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் தொடர்ச்சியாக கரிசனைகள் வெளிப்படுத்தப்பட்டு வரும் நிலையில், அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் மைக் லெவின் தனது டுவிற்றர் பக்கத்தில் இந்தக் கருத்தைப் பதிவிட்டுள்ளார்.

அதேவேளை, அண்மையில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு தொடர்பாகவும் அவர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் நடைமுறையில் இருக்கும் பயங்கரவாத தடைச் சட்டம் போராட்டக்காரர்களை அமைதிப்படுத்துவதற்கும், நபர்களை தன்னிச்சையாகத் தடுத்துவைப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது என்று அவர் சுட்டிக்காட்டினார். (எ-இ)



## புதிய தூதுவராக முன்னாள் அமைச்சர்

கொழும்பு, ஜூன் 20

பிரிட்டனுக்கான இலங்கையின் புதிய தூதுவராக முன்னாள் அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ-ரி2.இ)

## சம்பளம் வழங்குவதற்காக நிலத்தை விற்கத் தீர்மானம்!

*பொறியியல் கூட்டுத்தாபனத்தின் பரிதாப நிலைமை*

கொழும்பு, ஜூன் 20

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் நிலுவையிலுள்ள சம்பளம் மற்றும் சேமலாப நிதியை வழங்குவதற்காக பேலியகொடவில் உள்ள நிலத்தை விற்கத் தீர்மானித்துள்ளது.

கூட்டுத்தாபன ஊழியர்கள் மற்றும் தேசிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஆணைய ஊழியர்களுக்கான சம்பளம், நிலுவையிலுள்ள சம்பளம், சேமலாபநிதி என்பவற்றை வழங்கவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

நாளை 21.06.2023 புதன்கிழமை ஆனி 06

சுபநேரம் : 04.24 – 05.54

ராகுகாலம் : 11.54 – 01.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வழிதவறும் இளையோரை தடுத்து சமூகமயப்படுத்துக

## யாழ்.மாவட்டச் செயலர் வேண்டுகோள்

**யாழ்ப்பாணம், ஜூன் 20**

**இன்றைய இளைஞர்கள் தவறான வழியில் தடம்மாறிச் செல்வதைத் தடுக்கும் விதமாக அவர்களை சமூகமயப்படுத்தும் செயற்றிட்டங்களை ஒவ்வொரு கிராமங்களிலும் முன்னெடுக்கவேண்டும் என யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபால சுந்தரன் தெரிவித்தார்.**

அபாயகர போதைப்பொருள் தடுப்புக் குழுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றபோது அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் 100க்கும் மேற்பட்டோர் பணிபுரிவதற்கான எந்தவொரு தொழிற் சாலையும் காணக்கூடியதாக இல்லை. இன்றைய சமுதாயத்தில் எங்கு பார்த்தா லும் வன்முறை, பசி, பஞ்சம், வறுமை, வேலையின்மை என்பன மனித வாழ் வோடு கலந்திருக்கின்றன. அதனால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு முதலீடு செய்து சிறந்த தளங்கள் உருவாக்கப்படவேண் டும்.

மேலும் இளைஞர்களைச் சமூகமயமாக் குகின்ற செயற்றிட்டங்களை முன்னெடுப்ப தன் மூலம் அவர்கள் தவறான வழிகளுக் குள் செல்லாது தடுக்கமுடியும். ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கக்கூடிய சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங் கங்கள், விளையாட்டுக்கழகங்கள் என சமூக மட்ட அமைப்புக்கள், இளைஞர்க ளைத் தம்முள் அங்கத்தவர்களாக ஈர்க்க வேண்டும். இன்று எத்தனையோ சன சமூக நிலையங்கள் பல கிராமங்களில் மூடப்பட்டுள்ளன. அவை மீளத் திறக்கப்பட வேண்டும்.

கழகங்களிடையே விளையாட்டுப் போட்டி களை ஏற்படுத்தி அவர்களை விளையாட் டுச் செயற்பாடுகளிலும் ஈடுபடுத்த வேண் டும்.

கலை, கலாசார, பண்பாட்டுப் பாரம்பரிய நிகழ்வுகளை நடத்தவேண்டும். இவ்வா றான செயற்பாடுகள் மூலம் இளைஞர்கள் போதைக்கு அடிமையாவதிலிருந்து அவர் களை மீட்டுவரமுடியும் - என்றார்.

(ச-125)

# மிளகாய்த் தூளில் கலப்படம்

## நுகர்வோருக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 20

சந்தைகளில் கலப்படம் செய்யப்பட்ட மிளகாய்த் தூ ளின் விற்பனை அதிகரித்துள்ளது. நுகர்வோர் இதுதொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தச் சங்கத்தின் பொருளாளர் ரொஷான் குமார இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

சந்தையில் ஒரு கிலோகிராம் மிளகாய்த் தூள் ஆயிரத்து 600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்ப டுகிறது. மிளகாய்த் தூளில் 40 சதவீதம் வரையில் கலப்படம் செய்யப்படுகின்றமை கண்டறியப்பட் டுள்ளது.

மிளகாய்த் தூளின் விலை அதிகரித்துள்ளமை யால் அதிக இலாபத்தை ஈட்டுவதற்காக இத்த கைய மோசடி இடம்பெறுகிறது. மேற்கொள்ளப் பட்ட பரிசோதனைக்கமைய வர்ணம் சேர்க்கப்பட்ட கோதுமைமா, உப்புத்தூள் என்பன கலக்கப்பட் டுள்ளமை தெரியவந்துள்ளது. கலப்படம் தொடர் பில் நுகர்வோர் அவதானமாக இருக்கவேண்டும் - என்றார்.

(ச-இ)

# போதைக்கு அடிமையானவர் கந்தக்காட்டில் புனர்வாழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 20

மானிப்பாயில் ஆறு பிடியாணை யுடன் கைதுசெய்யப்பட்ட போதைப் பொருளுக்கு அடிமையானவர், கந்தக்காடு போதைப்பொருள் புனர் வாழ்வு மையத்துக்கு நீதிமன்றத்தி னூடாக அனுப்பப்பட்டுள்ளார் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித் தனர்.

மானிப்பாயில் சந்தேகத்துக்கிட மான முறையில் நடமாடிய குறித்த 22 வயதான இளைஞரை சோத னையிட்டபோது சிம் அட்டைகள் மற்றும் மெமறி கார்ட்டுகள் என்பன கைப்பற்றப்பட்டன.

அவரைக் கைதுசெய்து மேற்கொண்ட விசாரணையில் ஆறு பிடியாணை களும் 5க்கும் மேற்பட்ட திருட்டுச் சம்பவ வழக்குகளில் தொடர்புபட்டி ருந்தமையும் தெரியவந்தது.

அதனையடுத்து சந்தேகநபரை சட்ட மருத்துவ அதிகாரியிடம் முன்னி லைப்படுத்தியபோது போதைப் பொருளுக்கு அடிமையானவர் என் பது உறுதிப்படுத்தப்பட்டது.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்ப டுத்திய நிலையில் கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்புமாறு நீதி மன்று உத்தரவிட்டுள்ளது. (ச-125)

# 'கலைவாரிதி' விருதுக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 20

வலி.மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையி னால் வருடாந்த கலாசாரவிழா நடத்தப்படவுள் ளது. இந்த நிகழ்வில் கலைஞர் கௌரவிப் பான 'கலைவாரிதி' விருது வழங்கிக் கௌர விக் கப்படவுள்ளது. இதன் பொருட்டு 60 வயதுக்கு மேற்பட்ட தகுதியான பிரதேச கலைஞர்கள் தங்கள் கலை தொடர்பான விபரங்களை எதிர் வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்பாக தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வழங் கமுடியும் என சங்கானை பிரதேச செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.


(ஒ-ரி3,இ)

# கறுவாப் பயிற்சி

வவுனியாவில் கறுவாப் பயிர்செய்கையை ஊக் குவிக்கும் நோக்கில் செய்கையாளர்களுக்கு விளக்கமளிக்கும் பயிற்சி நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. வடபகுதியில் கறுவாப் பயிர்செய்கையை ஊக்குவித்து பணப்பயிராக மாற்றும் செயற்றிட்டம் புலம்பெயர் தமிழரான சுந்தரமூர்த்தி புவனகுமா ரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் வவுனியா வைரவபுளியங்குளத் தில் கறுவாச் செய்கையை பயிரிடுவது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதுடன் செய்கைமுறைகளும் காட்டப்பட்டன. கறுவாப் பயிர்செய்கையில் ஈடுபட ஆர்வமுள்ளவர்கள் சுந்தரம் சுரேஷ்குமார் என்ப வருடன் 0770743133 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-ரி3,110)



# தார் வீதியாக்கப்படும் சாவ. வடமராட்சி வீதி

ஆறு வருடங்களுக்கு முன்னர் இடைநிறுத்தப்பட்ட சாவகச் சேரி - பருத்தித்துறை வீதியின் புனரமைப்புப் பணிகள் மீண் டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரியிலிருந்து சர சாலை - துன்னாலை ஊடாக புலோலிச் சந்தி வரையான வீதி தார்க்கலவை வீதியாக மாற் றும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. முதற்கட்டமாக சாவகச்சேரியி லிருந்து கனகன்புளியடி வரை யான வீதியில் காணப்பட்ட மதகுகள் புனரமைக்கப்பட் டன. பின்னர் நிதிப்பிரச்சினை காரணமாக வீதிப்புனரமைப்பு பணிகள் இடைநிறுத்தப்பட் டன. அதனால் வீதியில் ஏற் பட்ட சேதங்கள் காரணமாக பயணிகள் பெரும் சிரமங் களை எதிர்நோக்கினர்.

இந்தநிலையில் சாவகச்சேரி யிலிருந்து வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளுக்குச் செல்வதற்கான வீதியான சாவகச்சேரியிலிருந்து கன கன்புளி யடி வரையான வீதி யின் புனரமைப்புக்கான நட வடிக்கை மீள ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

(ச-9)

# மடிக்கணினி வழங்கும் திட்டம்

கொடிகாமம், ஜூன் 20

தரம் -5 புலமைப் பரிசில் (2022) பரீட்சையில் சித் தியடைந்து இடைநிலைக் கல்வியை வரணிப் பிரதேச பாடசாலைகளில் தொடர் கின்ற மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கி ஊக் குவிக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மதியம் வரணி ஒன்றியத்தின் (யு. கே.) அனுசரணையுடன் இயற்றாலை அ.மி.த.க. பாட சாலையில் அதிபர் தலைமை யில் இடம் பெறவுள்ளது.

(ஒ-ரி2, 159)

## வருட இறுதியினுள்

# 800 பொருள்களுக்கு இறக்குமதித் தடைநீக்கம்

கொழும்பு, ஜூன் 20

இந்தவருட இறுதிக்குள் மேலும் 800 பொருள்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது எனத் திறைசேரியின் மூத்த அதிகாரி ஒரு வர் தெரிவித்துள்ளார். இந்தக் கட்டுப்பாடுகளை நாங்கள் காலவரையறையின்றி வைத்திருக்கமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பு தற்போது 1.6 பில்லியன் அமெரிக்க டொலராக உள்ளது. இது ஒரு வருடத்துக்கு முன்பு வெறும் 200 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. இந்த ஆண்டு இறுதிக்குள் நாட்டின் வெளிநாட்டு இருப்புக்களை மேலும் ஒரு பில்லியன் அமெரிக்க டொல ராகக் கட்டியெழுப்பும் இலக்கை அடைவோம்.

வாகனங்கள் மீதான இறக்குமதித் தடையைத் தளர்த்துவது, வெளிநாட்டுக் கையிருப்பில் ஏற்படுத்தும் இழப்பு காரண மாக சாத்தியமில்லை. வெளிநாட்டுக் கையிருப்புக்கு மிகக் குறைந்த அளவு இழப்பை ஏற்படுத்தும் பொருள்களின் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை மட்டுமே நாங்கள் நீக்கவுள்ளோம் - என்றார்.

(ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குப்பிழான் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது. (ய-66)



சாவகச்சேரி - கோயிற்குடியிருப்பு கிராமஅலுவலர் பிரிவு மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் புலம்பெயர்வு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த 15ஆம் திகதி வியாழக்கிழமை பொதுநோக்கு மண்டபத்தில் சமுர்த்திஅலுவலரின் தலைமையில் நடைபெற்றது. விழிப்புணர்வு நிகழ்வின் வளவாளர்களாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்திஉத்தியோகத்தர் கலந்துகொண்டு தனது கருத்துக்களை வழங்கினார். (ய-9)




முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத் தமிழ்ப் பழைய மாணவர்களில் ஒரு தொகுதியினரின் அனுசரணையுடன் அகில இலங்கை சைவமகாசபையின் சைவ அறப்பணி நிதியத்தால் சத்துமா உருண்டைகள் விநியோகிக்கப்பட்டன. (ய-66)




யாழ்ப்பாணம் பழையபூங்கா விதியில் வசிக்கும் அமரத்துவமடைந்த ஜெக்கப் மற்றும் புஸ்பமலரின் ஞாபகார்த்தமாக லண்டனில் வசிக்கும் அவர்களின் பிள்ளைகளால் பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி மற்றும் கற்றல் தேவைக்கான விளையாட்டு உபகரணங்கள் மருத்துவநிதி என்பன அவர்களின் இல்லத்தில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டன. (ய-63)

## குருதிக்கொடை

உலக குருதிக்கொடையாளர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொருளியல் துறையினர் யாழ். போதனா மருத்துவமனை குருதி வங்கிப் பிரிவினரின் அனுசரணையில் ஏற்பாடு செய்த குருதிக்கொடை முகாம் கடந்த 14ஆம் திகதி புதன்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மண்டபத்தில் நடைபெற்றது. (ய-66)





வரலாற்றுப் பிரசித்திபெற்ற தென்மராட்சி வரணி சிட்டிவேரம் கண்ணகி அம்மன் ஆலய தேர், தீர்த்த உற்சவ நாள்களில் சேவையாற்றிய இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர்களின் சேவையைப் பாராட்டி மேற்படி ஆலய நிர்வாகத்தினரால் கடந்த 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ய-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊஞ்சல் ஆடிய சிறுமி தூண் விழுந்து சாவு!

கொழும்பு, ஜூன் 20

அம்பாந்தோட்டை தங்காலை நெடோல்பிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் சிறுமி ஒருவர் வீடொன்றில் பாதுகாப்பற்ற முறையில் கட்டப்பட்டிருந்த கொங்கிறீட் தூண் இடிந்து விழுந்ததில் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை சிறுமி தனது தந்தையுடன் வீட்டில் உள்ள கொங்கிறீட் கம்பத்தில் ஊஞ்சல் ஆடிக்கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

(ஒ-இ)


**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 90 ரூபாய்

**077 334 1281** (CS/48414) AH-1


## மரண அறிவித்தல்



### திருமதி அருணாதேவி விஜயகுமார்

**(ஓய்வுநிலை பிரதி அதிபர் – யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்)**

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருணாதேவி விஜயகுமார் நேற்று (19.06.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராஜசிங்கம் - சிவக்கொழுந்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான நீலகண்டன் - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும், விஜயகுமார் (ஓய்வுநிலை அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற விமலாதேவி, ராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், துஷ்யந்தியின் (ஆசிரியை) அன்புத் தாயாரும், சனந்தனின் (ஆசிரியர்) அன்பு மாமியாரும், நந்தகுமாரி, வசந்தகுமாரி ஆகியோரின் அண்ணியும், கேசிகன், சரண்சிகன், நிதுசிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2023) செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS/50925)AH-1

**தகவல்: குடும்பத்தினர்.**


## கதிர்காம உற்சவமும் விசேட போக்குவரத்து சேவையும்



**சிங்ககிரி**

**Singakiri Express**

தினசரி சேவை

யாழ்ப்பாணம் - 3.50 pm
கிளிநொச்சி - 5.30Pm
வவுனியா - 7.15 Pm

கதிர்காமத்திலிருந்து ஒவ்வொரு நாளும் இரவு 11 மணிக்கு

கட்டணம் 2000/=

கதிர்காமம் தொடர்புகளுக்கு:
077 978 7824,
077 529 9015,
071 551 4557

தொடர்புகளுக்கு:-
வரணி ஆசனப்பதிவகம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2868, 077 604 8921

(CS/50921) AH-1


## Jaffna College - Vaddukoddai Vacancy IT teacher

Jaffna College is a prestigious and long standing private school in Vaddukoddai, Sri Lanka. The school is looking for an energetic, self-motivated and hard-working individual to join the staff.

**Requirements:**

- Bachelor of Science (B.Sc.) in Information Technology or Bachelor of Information Technology (BIT)
- Fluency in both English and Tamil, with the ability to conduct classes in both languages.
- Familiar with the following
    - o WordPress, including basic knowledge
    - o Python o MySQL o PHP

Classes to handle:

- Grade 10 and Grade 11: Information and Communication Technology (ICT).
- A/L: General Information Technology (GIT).

**Previous teaching experience will be an added advantage.**

Closing date for applications 26.06.2023

Applications with the names of two non-related referees should be sent to hr@jaffnacollege.lk

**Principal**

(cr.40163) (N-1)

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## Call for Mental Health Psychosocial Awareness Trainer

The HALO Trust is the world's largest and oldest international humanitarian mine action non-government organization (NGO). For over thirty years, we have been saving lives and helping war-torn communities recover, by making their land safe. Our mission is to protect lives and restore the livelihoods of those affected by conflict.

HALO has been working in Sri Lanka since 2002 and now has over 1,200 staff working in the Northern Province with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu. To date, HALO has safely destroyed over one million items of explosive ordnance, including more than 270,000 anti-personnel landmines. The explosive ordnance contamination is a result of over three decades of civil war that ended in 2009. HALO and other mine action stakeholders are working to clear Sri Lanka of all known contamination by 2028 to meet Sri Lanka's obligations as a state party to the Anti-Personnel Mine Ban Convention.

In preparation for Sri Lanka reaching mine-free status, HALO and other mine action operators have developed a Staff Livelihood Transition Strategy (SLTS). As part of the strategy, HALO is offering Mental Health and Psychosocial Support (MHPSS) workshops to all staff to strengthen their resilience and wellbeing.

We are looking to hire an organization or individual to continue conducting the MHPSS workshops. The right candidate will be contracted through a service contract agreement to conduct regular MHPSS workshops.

Requirements of the position:

- Bachelor's degree or Diploma in psychology, social work, or counselling.
- A minimum of **3 years' experience as** a professional counsellor.
- Superb verbal and written communication skills.
  Ability to empathize with clients and educate them on stress and trauma coping mechanisms.
- Provision of high-quality counselling and therapeutic support to the individuals and groups with the aim of maintaining and restoring emotional and psychological wellbeing. Services should be confidential - safe, nurturing and supportive – as well as comprehensive and coordinated across sectors.
- Work with people experiencing a wide range of emotional and psychological problems to help them bring about effective change and/or enhance their wellbeing.
- Good time management skills.
- Proven experience in developing effective treatment plans.
- Effective planning, organization, and problem-solving skills.

All applications must be submitted to the below address no later than Tuesday 27 June 2023. Only successful applications will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply for this role. We especially welcome applications from female candidates.

HR Manager
The HALO Trust,
450 Thirunagar West, Kilinochchi
hr@halosrilanka.org

(cr.40165) (N - 1)


துணிவே துணை

## முதலாம் ஆண்டு நினைவுதினம்

**(09.07.2023)**

மண்மகிழ் 13 • 04 • 1962

கண்ணெகிழ் 20 • 06 • 2022



### அமரர் இராசையா நித்தியானந்தன்

அன்பின் இலக்கணமாய் அகிலத்தின் அகல் விளக்காய்
உறவுகளின் உற்ற தோழனாய் உழவுத் தொழிலிலே
கண்ணும் கருத்துமாய் இரத்த வியர்வை
சிந்தி இறுதிவரை உழைத்த எம் குல விளக்கே!
உங்கள் நினைவுகள் சுமந்த உறவுகள்
நீங்கள் நேசித்த வயல் வெளிகள்
உங்கள் கரம் பதித் வர்ணச்செடிகள் பயன்தரு மரங்கள்
எம்முடன் நீங்கள் வளர்த்த சிம்மியா எல்லோரும்
உங்களின் பசுமை நிறைந்த நினைவுகளுடன்
மீண்டும் நீங்கள் மறு பிறவி எடுத்து
எம் மிடம் வருவீர்கள் என்ற நம்பிக்கையுடன் வாழ்கின்றோம்.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்**

**2 ஆம் வட்டாரம்,
கோம்பாவில், புதுக்குடியிருப்பு.**

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

# மின்கட்டணத்தை குறைக்காதிருக்கவே புதிய தலைவர் நியமனத்தில் இழுபறி

கொழும்பு, ஜூன் 20

மின்கட்டணத்தைக் குறைக்காதிருப்பதற்காகவே அரசாங்கம் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்குப் புதிய தலைவரை நியமிக்காமல் இழுத்தடித்து வருகின்றது என்று மின் பாவனையாளர் சங்கத்தின் தலைவர் சஞ்சீவ தம்மிக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கம் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவைப் பதவி நீக்குவதில் காட்டிய ஆர்வத்தை புதிய தலைவரை நியமிப்பதில் காட்டவில்லை. மின்கட்டணத்தை அதிகரிப்பதற்காகவே அரசாங்கம் அவசர அவசரமாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை நாடாளுமன்றத் தீர்மானத்தின் மூலம் பதவி நீக்கியது. அரசாங்கம் மின்கட்டணத்தை 3 வீதத்தால் குறைப்பதாகக் கூறுகிறது. ஆனால், மின்கட்டணத்தை 30 வீதத்தால் குறைக்க முடியுமென பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க கூறியிருந்தார். அரசாங்கம் மின்சாரசபையை ஒரு இலாபமீட்டும் நிறுவனமாகக் காட்ட முயற்சிக்கிறது. மின்கட்டணக் குறைப்புப் பற்றி மின்சாரசபையிடம் கேட்ட போது, 'பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்குத் தலைவர் நியமிக்கப்பட்டாலே மின்கட்டணத்தைக் குறைக்க முடியும்' என்று தெரிவிக்கப்பட்டது.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவர் பதவி வெற்றிடமாக உள்ளது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்திடம் கேட்ட போது, 'பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவரை ஜனாதிபதியே நியமிக்க வேண்டும். ஜனாதிபதி தற்போது வெளிநாடு சென்றுள்ளார். ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னரே இது பற்றி முடிவெடுப்பார்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது - என்றார்.

மின்கட்டணத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு, பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் அனுமதி வழங்கவேண்டும். ஜனகவின் நீக்கத்தின் பின்னர் அந்த இடம் வெற்றிடமாக உள்ளதால் மின்கட்டணத்தில் மாற்றங்கள் (கட்டணக்குறைப்பு) மேற்கொள்ள முடியாமலுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-6)


## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம்

தொழில்நுட்ப அலுவலர் (TO)

கணிய அளவையியலாளர் (QS)

Must experience with prepering Bill and BOQ

தொடர்பு: 077 2100 749

(காலை 8.00 தொடக்கம் மாலை 5.30 வரை)

Email - Bestbuilders12@hotmail.com

(CR 39958)A-1



SHARP

## வேலைவாய்ப்பு

பளை, முல்லையடிப் பகுதியிலுள்ள SHARP Mine Clearance நிறுவனத்துக்கு Camp Admin Officer, Logistic Assistant பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**தகுதிகள்**

- முகாமைத்துவ பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
- வயது எல்லை 26 - 35 உட்பட்டிருத்தல்
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
- ஆங்கிலம் மற்றும் சிங்களம் சரளமாகப் பேசக்கூடியவர்கள்.
- தங்கிநின்று வேலை செய்யக் கூடியவர்கள் தங்களது சுயவிபரக் கோவையை 24.06.2023 இற்கு முன்னர் எமது அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

நிர்வாகம்

(CS/50912)AH-1


## ஓராண்டு நினைவுகளுடன்....



மண்ணில் 15 . 01 . 1929

விண்ணில் 30 . 06 . 2022

## கந்தையா தம்பிராசா

( Rtd Investigating Inspector (II) of Postal Department )

திதி: 20.06.2023

ஓராண்டாயிற்றோ?
உங்கள் மறைவால்,
நீருண்ட கண்களுடன்
நின்றேங்கும் மனங்களுடன்...

78, இந்துக்கல்லூரி
ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவலைகள்



திருமதி

## நாகராசா சிவஞானேஸ்வரி

தோற்றம் 26.07.1938

மறைவு 21.05.2023



ஆருயிர் அம்மாவே ! நீங்கள் எங்களை
விட்டுப் போய் மாதம் ஒன்றாகிவிட்டது
எங்கள் தாயே ! உங்களை எங்களால்
எப்படி மறக்க முடியும் மாதர் குல
மாணிக்கமாய் குடும்ப குத்து விளக்காய்
எங்களோடு வாழ்ந்து அன்பினால்
எங்களை வழி நடத்திய நாட்களெல்லாம்
நினைவில் வருகின்றதே! என்ன செய்வோம்
ஆல விருட்சமாக வாழ்ந்து மறைந்த
எமது அன்புத் தாயாரின் ஆத்மா இறைவன்
திருவடிகளில் இளைப்பாற பிரார்த்திக்கின்றோம்.

11/8, பண்டாரக்குள லேன்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

நினைவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள்
குடும்பத்தினர்

தொ.பே.: 077 995 5895

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இனவாத அடக்குமுறைகளை தமிழர்கள் நிச்சயம் எதிர்ப்பர்



## வீரசேகரவுக்கு கஜேந்திரகுமார் பதில்



**கொழும்பு, ஜூன் 20**

**தமிழ் மக்களின் நலன்கள் இனவாத ரீதியிலான முடிவுகள் ஊடாகத் திட்டமிட்டு நசுக்கப்படுவதை நாம் எதிர்க்கின்றபோது, எம்மை வன்முறை மூலமாக அழிக்க வேண்டும் என்ற மனநிலையுடன் செயற்படும் சரத் வீரசேகர போன்றவர்களே போர்க்காலத்தில் ஓர் இனப்படுகொலையைச் செய்து முடித்துள்ளனர். திட்டமிட்ட இனவாதச் செயற்பாடுகளை நாம் நிச்சயம் எதிர்ப்போம்.**

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

குருந்தூர்மலை உள்ளிட்ட வடக்கில் பௌத்த சிங்களவர்களுக்கு எதிராகத் திரும்பியுள்ள அத்தனை விடயங்களுக்கும் ஜனாதிபதி விரைந்து தீர்வு காணவேண்டும். இல்லையேல் பௌத்த - சிங்கள மக்களின் பேரெழுச்சியை எவராலும் கட்டுப்படுத்தமுடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினரும், கடற்படையின் முன்னாள் தளபதியுமான சரத் வீரசேகர உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ள கருத்துத் தொடர்பாக வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்மக்களின் நலன்களைத் திட்டமிட்டு அழிக்கும் வகையில் அரசாங்கம் செயற்படும் ஒவ்வொரு தடவையும் தமிழ் மக்கள் நிச்சயமாக அவற்றை எதிர்த்தே ஆக வேண்டும். சிங்கள ஆக்கிரமிப்புக்கெதிராகப் போராடும் தமிழ்மக்கள் மீது சிங்கள இனவாதிகள் வன்முறையைக் கட்டவிழ்க்க முற்பட்டால் உலகம் அதைக் கருத்தில் கொள்ளும்.


வடக்குக் - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் சிங்கள மக்களுக்கு எதிராகவோ, அவர்களுக்குத் தீமை வர வேண்டுமென்றோ எந்தச் சந்தர்ப்பத்திலும் செயற்பட்டது கிடையாது. தமிழ்மக்களின் நலன்கள், இனவாத ரீதியிலான முடிவுகள் ஊடாகத் திட்டமிட்டுத் தடுக்கப்படுகின்றபோது, தமிழ்த் தேசத்தின் அடையாளம் திட்டமிட்ட வகையில் அழிக்கப்படும்போது, தமிழ்த்தேசத்தின் இருப்பு ஓர் இன அழிப்புக்கோ, இனப் படுகொலைக்கோ உள்ளாக்கப்படும்போதே தமிழ் மக்கள் அவற்றை எதிர்த்துச் செயற்பட்டு வருகிறார்கள்.

குருந்தூர்மலையில் தொல்பொருள் சார் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் காணப்படுகின்றமை தமிழ்மக்கள் நீண்டகாலமாக அறிந்த விடயம். ஆயினும் அங்கு காணப்படுகின்ற தொல்பொருள் அடையாளங்களை அழிப்பதற்குத் தமிழ்மக்கள் எந்தக் காலத்திலும் முயலவில்லை. ஆனால் பல நூறு வருடங்களுக்கும் மேலாகத் தமிழ்மக்களால் குருந்தூர்மலையில் மேற்கொள்ளப்பட்டு வந்த பாரம்பரிய சைவ வழிபாடுகளை இல்லாமற் செய்து, அழித்துக் குருந்தூர்மலை திடீரெனச் சுற்றிவளைக்கப்பட்டு, இராணுவம் குவிக்கப்பட்டு அங்குள்ள தொல்பொருள்கள் தொடர்பில் எந்தவித ஆய்வுகளும் மேற்கொள்ளப்படாமலேயே பௌத்த விகாரையை அமைத்திருப்பது தமிழ்மக்களுக்குப் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன.

தமிழ்மக்களில் குறிப்பிட்டளவான மக்கள் ஒரு காலத்தில் தமிழ்ப் பௌத்தர்களாக இருந்துள்ளனர் என்று சொல்லப்படும் நிலையில் தமிழ்மக்களின் சரித்திரம்தான் குருந்தூர்மலை.

அதைப் பாதுகாக்க வேண்டியது தமிழ்மக்களின் கடமையும், பொறுப்புமாகும்.

அதேநேரம் தமிழ்ப் பிரதேசங்களான வெடுக்குநாறிமலை, தையிட்டி போன்ற பல பிரதேசங்களையும் சிங்கள மயமாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய இனவாதத்தைத்தான் நாங்கள் எதிர்க்கின்றோம். தொடர்ந்தும் நாங்கள் எதிர்ப்போம் - என்றார். (எ-66)



## கைது

கொழும்பு, ஜூன் 20

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் வேலை வாங்கித் தருவதாகப் போலியான விசாக்களை ஏற்படுத்திக் கொடுத்து பலரை ஏமாற்றிய சம்பவம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எச்.ஏ.ஹலீமின் சகோதரர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாயில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி பலரிடமிருந்து பணத்தை மோசடி செய்த மூன்று முறைப்பாடுகளை விசாரித்தபோதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபரை நாளை வரை விளக்கமறியலில் வைக்க கண்டி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஒ-ரி2-இ)

⅄ ⅄ ⅄

கொழும்பு, ஜூன் 20

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த வியாழக்கிழமை அலரிமாளிகையில் இடம்பெற்ற தேசிய கல்வி டிப்ளோமா பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டதிருகோணமலை கிண்ணியாவைச் சேர்ந்த 27 வயதான பெண்ணொருவர் இரு தேசிய அடையாள அட்டைகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-ரி3-இ)

### ஒரே நேரத்தில்

## இந்திய - பாகிஸ்தான் கப்பல்கள் வருகை

கொழும்பு, ஜூன் 20

இந்தியாவின் நீர்மூழ்கிக் கப்பல் மற்றும் பாகிஸ்தானின் போர்க் கப்பல் என்பன இலங்கைக்கு ஒரே நேரத்தில் வந்துள்ளன.

இந்திய கடற்படையின் உள்நாட்டு நீர்மூழ்கிக் கப்பல் வாகீர் இலங்கையை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வந்தடைந்தது. இந்தக்கப்பல் நாளை மறுதினம் வியாழக்கிழமைவரை கொழும்பில் தரித்திருக்கும். 'உலகளாவிய பெருங்கடல் வலயம்' என்ற கருப்பொருளின்கீழ் சர்வதேச யோகா தினத்தின் 9 ஆவது பதிப்பை நினைவுகூரும் வகையில் இந்தப் பயணம் மேற்கொள்ளப்படுவதாக இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. பொதுமக்கள்,பாடசாலை மாணவர்கள் பார்வையிடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, கப்டன் ஜாவாத் க்ஹுசைன் தலைமையிலான பாகிஸ்தான் கடற்படைக் கப்பல் பி.என்.எஸ். திப்பு சுல்தான் கொழும்பை நேற்றுமுன்தினம் வந்தடைந்தது. இந்தக் கப்பல் இன்று இலங்கையிலிருந்து புறப்படவுள்ளது. (ஒ-ரி3-இ)



## எரிபொருள் விலை; மீளாய்வு மாற்றம்

கொழும்பு, ஜூன் 20

எரிபொருள் விலைத் திருத்தம் மேற்கொள்ளப்படும் திகதியை மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. முன்னதாக எரிபொருள் விலைத்திருத்தம் மாதத்தின் முதலாம் திகதி முன்னெடுக்கப்பட்டது. எனினும், கடந்த எரிபொருள் விலைத் திருத்த காலப்பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் நீண்ட வரிசை காணப்பட்டது.

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் உரிய முறையில் எரிபொருள் கையிருப்பை பேணாமையே அதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து எரிபொருள் விலை மாற்றத்துக்கான திகதியை மாற்றம் செய்வதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது. (ஒ-ரி2-இ)

## தலதாமாளிகைக்குள் துப்பாக்கித் தோட்டாக்கள்



கொழும்பு, ஜூன் 20

தலதாமாளிகை வளாகத்திலிருந்து ரி-56 துப்பாக்கியின் தோட்டாக்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

தலதாமாளிகையின் பாதுகாக்கப்பட்ட பகுதியில் அமைந்துள்ள ராஜா வீதி வழியாக தலதாமாளிகை வளாகத்துக்குள் நேற்றுமுன்தினம் நுழைந்த கண்டி மாநகரசபைக்குச் சொந்தமான குப்பைவண்டியில் இருந்து ரி-56 துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 32 தோட்டாக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில், குப்பைவண்டியின் சாரதி மற்றும் உதவியாளர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஒ-ரி2-இ)

## கணவனுக்குத் தீ வைத்த மனைவி

குடும்பத் தகராறு காரணமாக பெண்ணொருவர் தனது கணவனுக்குத் தீ வைத்த சம்பவமொன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மொரட்டுமுல்ல பகுதியில் இடம்பெற்றுள்ளது. இந்தப் பெண் நீண்ட காலமாக வேறு நபருடன் தகாத உறவில் இருந்து வந்ததாகவும், அதன் காரணமாக தம்பதியினருக்கு இடையில் அவ்வப்போது தகராறுகள் ஏற்பட்டுள்ளதாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இந்தநிலையில், கணவன் தூங்கிக் கொண்டிருந்தபோது மனைவி அவரின் உடலில் தீ வைத்து எரித்ததில் கால்கள் இரண்டும் தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளன. அவர் சிகிச்சைக்காக கொழும்பு தெற்கு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-ரி3-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா காலமானார்

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவியும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாந்தா அபிமன்னசிங்கம் (வயது-77) நேற்றுக் காலமானார்.

யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் நீண்டகாலத் தலைவியாக இருந்த அவர், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நீதிமன்றங்களின் மேம்படுத்தல்களிலும் சட்டத்தரணிகளின் நலன்களிலும் அக்கறையுடன் செயற்பட்டார். இவர், இலங்கையில் முதலாவது தமிழ்ப் பெண் ஜனாதிபதி சட்டத்தரணி என்ற பெருமைக்குரியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

# பொலிஸாருக்கு எதிராக மருதங்கேணியில் போர்!

யாழ்ப்பாணம், ஜூன் 20

மருதங்கேணிப் பொலிஸாருக்கு எதிராக, மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்றையதினம் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மருதங்கேணியில் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்று, நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு எதிராகவும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கு எதிராகவும் மருதங்கேணிப் பொலிஸார் நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள பின்னணியில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. போராட்டத்தில் ஈடுபட்டோர், 'வடக்கு - கிழக்கு தமிழரின் தாயகம்', 'மருதங்கேணி பொலிஸே பொய் வழக்குப் போடாதே', 'எங்கள் மண் எமக்கு வேண்டும்', 'எங்களின் கடல் எமக்கு வேண்டும்' உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியிருந்தனர். (அ-ம-27,26)

## ஐ.நா....

ஜெனிவாவில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது அமர்வு நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமானது. இதில், இலங்கை தொடர்பில் நேற்றுக் கலந்தாலோசிக்கப்பட்டது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் இலங்கை அரசாங்கத்திடம் பொறுப்புக்கூறலை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம். எனினும் இலங்கை அரசாங்கம் எமது கோரிக்கையை நிராகரித்து வருகிறது. கடந்த காலங்களில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அதிகாரிகள் பல தடவைகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியுள்ளனர். அதன்படி எமது வலியுறுத்தல்களை இலங்கை அரசாங்கம் முற்றாக நடைமுறைப்படுத்தவேண்டும் - என்றார். (அ-ம-6)

## பாண்...

வால் குறைப்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோதுமை மாவின் விலை முன்னர் 430 ரூபாவாக காணப்பட்டது. தற்போது சந்தையில் 170, 160 ரூபாவாகக் காணப்படுகின்றது. தட்டுப்பாடுகள், விலை அதிகரிப்பைத் தவிர்ப்பதற்காகவே கோதுமை மாவை அத்தியாவசியப் பொருளாக அறிவித்துள்ளோம். எதிர்காலத்தில் கோதுமை மாவின் விலை ஒருபோதும் அதிகரிக்கப்படாது. இந்த உத்தரவாதத்தின் அடிப்படையில் பாண் விலையையும் இதர வெதுப்பகப் பொருள்களின் விலையையும் குறைக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம)

## அதிபர்கள்...

யாலயம், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாசாலை, ஊர்காவற்றுறை மரியாள் உரோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாசாலை, நாரந்தனை கணேச வித்தியாசாலை, பருத்தியடைப்பு கதிரேசானந்தா வித்தியாசாலை, கரம்பொன் சண்முகநாதன் மகாவித்தியாலயம் ஆகிய எட்டு பாடசாலைகளே அதிபர்கள் இல்லாமல் இயங்குகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதுகுறித்து கல்வி அமைச்சின் செயலாளர் உமாமகேஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்டபொழுது அவர் தெரிவித்ததாவது:-

சில அதிபர்களுக்குரிய நேர் முகத்தேர்வு இடம்பெற்று வருகின்றது. விரைவில் அந்தப் பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமிக்கப்படுவார்கள் - என்றார். (அ-ம-125)

## பிரசவித்து...

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசித்த சந்தேகநபர், பொலிஸ் நியமனம் கிடைத்ததையடுத்து பணி நிமித்தம் களுத்துறைக்குச் சென்றுள்ளார். அங்கு சிங்கள யுவதியொருவரை காதலித்துத் திருமணம் செய்து கொண்டு மீண்டும் ஊர்காவற்றுறைக்குத் திரும்பியுள்ளார். பின்னர் பொலிஸ் வேலையையும் அவர் கைவிட்டு தினக்கூலிக்குச் சென்றுவந்துள்ளார். இந்தத் தம்பதிக்கு இரண்டாவது குழந்தை பிறந்து ஆறு நாள்களேயான நிலையிலில், குடும்பத்தலைவர் நிகழ்வொன்றுக்குச் செல்வதற்காக நேற்றுமுன்தினம் இரவு ஆயத்தமாகியுள்ளார். பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உறவினர்கள் ஊர்காவற்றுறையில் இல்லை என்பதாலும், பிரசவித்து சில நாள்களே என்பதாலும் இரவுவேளையில் அவர் தன்னைத் தனியே விட்டு வெளியே செல்லாமல் இருக்குமாறு கணவனைக் கோரியுள்ளார். இதையடுத்தே கோபமடைந்த கணவன், பிரசவமான பெண்ணென்றும் பாராமல் மனைவியை, வீட்டுக்கு வெளியே தெருவுக்கு இழுத்துச்சென்று அங்குவைத்து தும்புத்தடியால் கடுமையாகத் தாக்கியுள்ளார். இதனால் அந்தப் பெண்ணுக்கு குருதிப்போக்கு ஏற்பட்ட நிலையில் அவரை வீதியிலேயே விட்டு விட்டு கணவர் சென்றுவிட்டார். இதையடுத்து அந்தப்பெண் அயலவர்களின் உதவியுடன், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பாதிக்கப்பட்ட பெண் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபரான அவருடைய கணவன் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் இரவே கைதுசெய்யப்பட்டு நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-26-23)

## 7 பச்சிளம்...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

குறித்த நபர் வளர்த்த நாய் அண்மையில் ஏழு குட்டிகளை ஈன்றுள்ளது. அந்தக் குட்டிகள் தாயிடம் பாலுக்காக சத்தமிட்டதையடுத்து, அந்தச் சத்தம் தூங்குவதற்கு இடையூறாக இருந்தமையாலேயே அவர் கிடங்கொன்றை வெட்டி அதில் தீமூட்டி இந்த ஏழு குட்டிகளையும் எரித்துக்கொன்றதாகத் தெரியவருகின்றது.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸாரிடமும், யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடமும் தொலைபேசி வாயிலாக முறையிடப்பட்டுள்ளது. இந்த முறைப்பாட்டுக்கமைய முடியுமான அத்தனை நடவடிக்கைகளையும் எடுக்குமாறு யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார். மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-9-125)

## நாணய...

யும் எதிர்க்கட்சிக்கு வெளிப்படுத்தி, எதிர்க்கட்சியுடன் பேச்சுக்களை நடத்தி ஆலோசனைகளைப்பெற்று சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட தரப்பினரை அணுக வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் எதிர்க்கட்சி ஒன்றியத்தின் செயற்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே சஜித் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்து கொண்ட ஒப்பந்தத்துடன் தொடர்பான தரவுகள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் அப்போதைய நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவிடம் பல முறை கோரிக்கை விடுக்கப்பட்டபோதும், அவர் அதனை வழங்கவில்லை. ஒப்பந்தம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தால், சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்து கொள்ளவுள்ள ஒப்பந்தத்தை மக்கள் தரப்பில் வலுப்படுத்தி முற்போக்காக செயற்படுத்தும் சாத்தியம் இருந்தது. ஆனால், அது நடக்கவில்லை. இந்தத் தரவுகள் நாட்டுக்கும் நாடாளுமன்றத்துக்கும் தெரியாமல் மறைக்கப்பட்டுள்ளன.

இதற்காக ஐக்கிய மக்கள் சக்தி, நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதை மறுப்பதாகவோ அல்லது எதிர்ப்பதாகவோ பொருளல்ல. நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றமையை நாம் ஏற்றுக்கொண்டாலும் எதிர்த்தரப்பு நிபந்தனைகளை சிறந்த முறையில் கையாண்டிருக்கவேண்டும் என்பதே இங்கு விடயம். மத்திய வங்கியின் ஆளுநரும், நிதி இராஜாங்க அமைச்சரும் உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்கப் போவதில்லை எனத் தெரிவித்திருந்தபோதிலும், உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதாக ஜனாதிபதி கூறியமை ஆச்சரியமளிக்கின்றது - என்றார். (அ-ம)

## கம்மன்பிலவின்...

மலைக்கு சாதாரணமாக வந்து சென்றுவிடமுடியாது. தமிழர்களாக எமது பூர்வீக நிலத்தின் இருப்பினை உணர்த்தும் வகையில் நாம் போராட்டத்தை மேற்கொண்டு இது எமது பூர்வீக தாயகம் என்பதனை அவருக்கு உணர்த்தவேண்டும். எமது சிறிய எதிர்ப்புக்கூட இல்லையெனில், அவர் தானாக வந்து தன்னுடைய இனவாத நிகழ்ச்சிநிரலை சிங்கள ஊடகங்களுக்கு கக்கிவிட்டுச் சென்றுவிடுவார். இதனால், நாளைமறுதினம் 21ஆம் திகதி (நாளை) காலை 7:30 மணியளவில் கம்மன்பிலவின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் முன்னெடுக்கப்படும் - என்றார். (அ-ம-125)

## இலங்கையில்...

இந்தநடவடிக்கைமுன்னெடுக்கப்பட்டது. வெளிநாட்டவர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், பிறமொழி ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட தரப்பினர் இந்த ஒளிப்படக் காட்சிப்படுத்தலை விரிவாக கேட்டறிந்து கொண்டனர். (அ-ம)

## எரிபொருள்...

விலை பீப்பாய் ஒன்றுக்கு சராசரியாக ஒன்று தொடக்கம் இரண்டு டொலர் அளவுக்குக் குறைந்துள்ளது. இதனால் எரிபொருள் விலைகள் சர்வதேச அளவில் மறுசீரமைக்கப்பட வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-ம)

## இலங்கைக்கு...

இருக்கும் என்றும், இந்த நிதிக்கான ஒப்புதல் உலக வங்கியின் அடுத்த பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்படும் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு.

* கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 1/2 km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200 m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி).
* கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
* ஒரு பரப்பின் விலை ஒரு லட்சத்தி எண்பதாயிரம் ரூபாய் (180,000/=) மட்டும்.

தொடர்பு: 076 739 0413


Noolaham Foundation noolaham.org | aavanaham.org

## மருத்துவர்களின் வீட்டின் மீது பெற்றோல் குண்டு தாக்குதல்

யாழ்., ஜூன் 20

யாழ்ப்பாணம், கந்தர்மடம் பழம் வீதியில் உள்ள மருத்துவர்கள் இருவரின் வீட்டின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றது என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு இல்லை எனத் தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதாகத் தெரிவித்தனர்.

தாக்குதல் நடத்தப்பட்ட வீட்டில் இருவர் மருத்துவர் என்று குறிப்பிட்ட பொலிஸார், காணிப் பிணக்கு ஒன்றை வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவருவதாகவும் தெரிவித்தனர். (ம)


மாலை நேர மீட்டல் வகுப்புகள்

**A/L 2023 & 2024**

**வர்த்தகப்பிரிவு**

- கணக்கீடு - D.Sam
- பொருளியல் - KR. உதயன்
- வணிகக்கல்வி - TS. ரிஷி & பசில் கெஷோன்

ஆரம்பம் : 22.06.2023 வியாழன் மாலை 03 மணி

DMI Jaffna

## மணமகள் தேவை

01. சண்டிலிப்பாய் - பண்டத்தரிப்பு, இந்து கௌரவகுலம் (V) 1989. பூராடம். B.Eng (Hons), Singapore மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 34424
02. கரவெட்டி. இந்து கௌரவகுலம் (V) 1992. பூராடம். Bachelor & Commerce Finance and Law, MBA, Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 31471
03. காரைநகர் - இந்து கௌரவகுலம் (V) 1993. பரணி. BSc Civil Engineering (Peradeniga University),Singapore மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 31449
04. தெல்லிப்பளை - புத்தூர். இந்து கௌரவகுலம் (V) 1979. அவிட்டம். CIMA Fully Complited, A.C.A, Charted Accountant மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32638
05. வட்டுக்கோட்டை - இந்து கௌரவகுலம் (V)1977. புனர்பூசம் Business Managment Degree, Uk Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32812
06. பருத்தித்துறை - சண்டிலிப்பாய், இந்து கௌரவகுலம் (V) 1985. திருவாதிரை. Masters in Engineering, UK Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32793
07. சங்கானை - இந்து கௌரவகுலம் (K) 1992. விசாகம். BA (Hons), Accounting, Accountant, UK Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 34210

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Phone - 077 539 3728 Whatsapp - 077 803 8193

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் :- 21.11.1945
மறைவு :- 18.06.2023

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு பெருமளவிலான காணியை வழங்கி உதவியவரும், சட்ட ஆலோசகருமாகிய

**சாந்தா அபிமன்னசிங்கம்**

அவர்களுக்கு எமது வைத்தியசாலை சார்பில் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நோயாளர் நலன்புரிச் சங்கம், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை.

## பணியாளர் தேவை

யாழ்நகரில் உள்ள பிரபல ஹொட்டல் ஒன்றிற்கு பகல் மற்றும் இரவு நேர பாதுகாப்பு பணியாளர்கள் (ஆண்கள்) தேவை.

தொடர்பு: 076 624 8529

## தேவை

வயதான பெண்ணை கவனிப்பதற்கு பெண் உதவியாளர் தேவை.
வேலை நேரம்:
காலை 6.00 மணி - பி.ப. 6.00 மணிவரை.

தொடர்பு: 077 993 5844

## மேல்மாடி வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அருகல் 3 அறைகள், குளியலறை, சமையலறை மற்றும் வீட்டு தளபாடங்கள் உடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

076 454 4023

**DMI இல்**

பொருளியல் KR. உதயன் உம்

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.
* ஒரு பரப்பின் விலை 300,000/= (மூன்று லட்சம்) மட்டும்.

தொடர்பு: 076 7336 047, 076 7558 606

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னாரில் இருக்கும் எமது நளின் நிறுவனத்தின் கிளைக்கான வேலைவாய்ப்பு

- **Show Room Manager** - 4 வேலைவாய்ப்பு
  யாழ்ப்பாணம் - 3 பேர்
  கிளிநொச்சி - 1 பேர்
- **Service Centre Assistant** - 3 வேலைவாய்ப்பு
  யாழ்ப்பாணம் - 1 பேர்
  கிளிநொச்சி - 1 பேர்
  மன்னார் - 1 பேர்
- **Accountant** (வணிகத்துறையில் Degree / Diploma) - 2 வேலைவாய்ப்பு
  யாழ்ப்பாணம் - 2 பேர்
- **Camera Technicians** - 3 வேலைவாய்ப்பு
  யாழ்ப்பாணம் - 2 பேர்
  மன்னார் - 1 பேர்

கணினிசார் அறிவு மற்றும் குறித்த துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (with Driving Licence)

தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ உங்கள் விண்ணப்பங்களை அனுப்புங்கள்.

மேலும் EPF, ETF வழங்கப்படும்.
தங்களது தகுதிக் கேற்ற வேதனம் வழங்கப்படும்.
தங்களது விண்ணப்பங்களை 26.06.2023 இற்கு முன்பு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


தபால் மூலம்
194/2 பரமேஸ்வரா சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

NALIN Information Technologies (Pvt) Ltd
Computers of the North

Email – info@nit.lk
Contact No - 021 222 1121
077 542 7426

## நீங்காத நினைவுகளுடன் ஆண்டுகள் இரண்டு

அன்னையின் மடியில் 14 . 07 . 1968



அம்பாளின் அடியில் 12 . 07 . 2021

**அமரர் பொன்னம்பலம் தயானந்தன்**
(முன்னைநாள் அதிபர்-யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை)

திதி-பூர்வபட்ச துதியை 20.06.2023

கண்கள் இரண்டும் உன் வதனம் தேடி!
செவிகள் இரண்டும் உன் வரிகள் தேடி!
கால்கள் இரண்டும் உன்னையே தேடி!
செல்லும் இடமெல்லாம் தேடியே
தொலைந்தன ஆண்டுகள் இரண்டு
நீங்கள் காட்டிய வழியைத் தொடர்ந்து
பயணிக்கின்றோம் விதியை எண்ணி!

49/3, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

மனைவி, பிள்ளைகள்.




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.